**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**
**O.S. No.19/2023**

2026 –ம் ஆண்டு ஜீலை மாதம் 10 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ன்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 10.07.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரவிச்சந்திரன் (DW–1 ) | வயது | : | 58 /2026 |
| க/த பெயர் | : | திரு. நாகராஜன் | தொழில் | : | கொத்தனார் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதியானவர் எனது உறவினரா என்றால் எனது சித்தப்பா. எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் எனது பெரியப்பாவின் வாரிசுதார்களிடம் இருந்து கிரயம் பெற்ற ஆவணத்தை செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் தங்கவேல் கொத்தனாருக்கு சொந்தமான சொத்து. அவருக்கு வாரிசுதாரர்கள் யார் என்றால் தருமாம்பாள், மாரிமுத்து, நாகராஜன், சாமிநாதன் ஆகியோர் வாரிசுதாரர்கள். தாவா சொத்தின் விஸ்திரணம் எனக்கு தெரியுமா என்றால் 1960 சதுர அடி. தாவா சொத்தில் என்ன உள்ளது என்றால் கூரைவீடு அதன் பின்புறம் காலிமனையாக உள்ளது.

2. அந்த கூரை வீட்டில் யார் குடியிருக்கிறார் என்றால் சாமிநாதன் மகன் குமார் ஒரு பகுதியில் குடியிருந்து வருகிறார். தாவா சொத்து 4 நபர்களுக்கு சொந்தமானதில் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டார்களா என்றால் வாய் மொழியாக பாகம் பிரித்து கொண்டார்கள். அதற்கான ஆதார ஆவணங்கள் எதேனும் உண்டா என்றால் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக ஆரம்பத்தில் யார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றும் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்

செய்து நீதிமன்றம் மூலம் பாகம்பிரித்து கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. அந்த வழக்கு சம்பந்தமான மேல்முறையீடு செய்தாரா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற உத்தரவின்படி யாரும் தாவா சொத்திற்கு பாகம் பிரிக்கும் படி பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எனது அப்பா நாகராஜன் மாவட்ட நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வேண்டி அசல் வழக்கு எண்.13/2011 வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பளிக்கப்பட்டது. என்ன தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றால் முதல்நிலை தீர்ப்பான பாகப்பிரிவினை வேண்டும் என்றும், இறுதிநிலை தீர்ப்பாணையின்போது நாங்கள் சமரசமாக நீதிமன்றத்தின் வெளியே தீர்த்து கொண்டோம். அதுபோல் சமரசமாக பேசி தீர்க்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக அது போல் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் சில ஆவணங்களை பரிசீலனை செய்து சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

Sd/-(N. Azhagesan)
District Munsif
Mannargudi.